

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சோலை அழகுபுரம் பகுதி 80வது வட்டத்திற்குட்பட்ட சுமார் 2ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் கே. தனசெல்வம், அன்பழகன், கண்ணன், காவேரி, பெ.சசிக்குமார், வக்கில் கலாநிதி, சிறைச்செல்வன், வடிவேல்முருகன், ஒத்தக்கடை சரவணன், முருகானந்தம், முகம்மதுரபி, வெற்றிச்செல்வன், ஐயப்பன் மற்றும் வட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர், பயனாளிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதுரை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மேலூரில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினம் மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் எம்.இளங்கோ தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக இளம் பேச்சாளர் பிரசாத், மேலூர் நகர செயலாளர் முகமது யாசின், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் குமரேசன், வெற்றிச்செல்வன், ஐயப்பன், மருதுராஜா, வன்னிமுத்து பாண்டி மற்றும் திரளான கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

## தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பை வழங்கும்!

# திருப்புவனம் காவல் நிலைய மரண வழக்கு - சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றம்!

## “இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்துவிடக் கூடாது!”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, ஜூலை 3–**

**திருப்புவனம் காவல் நிலைய மரண வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

**இவ்வறிவிப்பினை வெளியிட்டு அறிக்கை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இவ்வழக்கின் விசாரணைக்கு தமிழ்நாடு அரசு சி.பி.ஐ.க்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்! இனி இது போன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்து விடக் கூடாது” என்று குறிப்பிட்டுள்ளார்கள்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில், கடந்த 28-6-2025 அன்று வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார் என்பவர், திருப்புவனம் காவல் நிலையத்தில் மர்மமான முறையில் மரணம் அடைந்தார். விசாரணையின் போது காவலர்கள் நடத்திய தாக்குதல்தான் அவரது மரணத்துக்குக் காரணம் என்பதை அறிந்ததும் நான் மிகவும் வேதனையடைந்தேன்.

இது யாராலும் நியாயப் படுத்தப்பட முடியாத, காரணம் சொல்லித் தப்பிக்க முடியாத செயல். இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றம்சாட்டப்பட்ட 6 காவலர்கள் உடனடியாகச் சம்பவம் நடந்த அன்றே பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இத்தகைய வழக்குகளில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடைமுறைகளின்படி, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றைய தினம், 5 காவலர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணை சிபிசிஐடி பிரிவுக்கும் மாற்றப்பட்டது.

இன்று சம்பந்தப்பட்ட மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். துணைக் கண்காணிப்பளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இப்படி சட்டபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

துயர மரணத்தை அடைந்துள்ள அஜித்குமார் அவர்களின் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு நான் பேசினேன். நடைபெற்ற துயரச் சம்பவத்திற்கு எனது வருத்தத்தை அவர்களிடம் தெரிவித்தேன்.

நியாயமான, ஒளிவுமறைவற்ற, எவ்வித பாரபட்சமுமற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும், இந்தச் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, திரு. அஜித்குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு நியாயம் கிடைத்திட வழிவகை செய்யப்படும் என்றும் உறுதியளித்துள்ளேன்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, இவ்வழக்கில் சிபிசிஐடி தனது விசாரணையைத் தொடரலாம் எனவும் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்தச் சம்பவத்தில் காவல் துறையைச் சேர்ந்த ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கின் விசாரணை குறித்து, எந்தவிதமான ஐயப்பாடும் எழுப்பப்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றிடுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். சி.பி.ஐ. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும்.

காவல்துறையினர் தங்களது விசாரணையின்போது மனித உரிமையைக் காக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். இதுபோன்ற மீறல் சம்பவங்களை நான் எப்போதும் ஏற்றுக்கொள்வது இல்லை.

திருப்புவனத்தில் சில காவலர்கள் செய்த செயல், மன்னிக்க முடியாதது. இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்துவிடக் கூடாது என்பதை எச்சரிக்கையாகவே சொல்ல விரும்புகிறேன்.

தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்திடும் என நம்பி காவல்துறையை நாடி வரும் பொதுமக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றிடும் வகையில் காவல் துறை எப்போதும் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## நெல்லையில் ஓரணியில் தமிழ்நாடு திட்டம் தொடக்கம்!

# தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிராக அ.தி.மு.க. செயல்படுகிறது!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் – மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. பேட்டி!





*நெல்லை.ஜூலை.3*

நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூட்டாக தெரிவித்ததாவது.

தமிழகத்திற்கு விரோதமான செயல்களில் ஒன்றிய அரசு தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.ஹிந்தி,சம்ஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளின் வளர்ச்சிக்கு ஒதுக்கியதைக் காட்டிலும் குறைவாகவே தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்குகிறது.மும்மொழி கொள்கை என்ற பெயரில் ஹிந்தியை திணிக்க முயல்கிறார்கள். பெருவெள்ளம், புயல் மழை போன்ற இயற்கை பேரிடர்களால் சென்னை மற்றும் தென்மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் ஒன்றிய அரசு கேட்கும் நிதியைக் கொடுக்காமல் பா.ஜ.க அரசு வஞ்சித்தது.குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தை முறையாக அமல்படுத்தி மக்கள் தொகையை கட்டுக்குள் வைத்துள்ள தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களில், மக்கள் தொகை அடிப்படையிலேயே மக்களவைத் தொகுதி என்ற நிலையில் மக்கள் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க முயல்கிறார்கள்.

தொடர்ந்து ஒன்றிய அரசு தமிழக மக்களுக்கு விரோதமாக செயல்பட்டு வருகிறது.தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிரான இயக்கமாக அ.தி.மு.க.மாறியுள்ளது. அதனால்தான்,தமிழகத்தை வெறுத்து ஒதுக்கும் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்துள்ளது.அ.தி.மு.க.

வை பா.ஜ.க விழுங்கி வருகிறது. இது எடப்பாடி பழனிச்சாமிக்கு நன்றாக தெரிந்தும் ஆனாலும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் ஒரே நோக்கத்திற்காக செயல்பட்டு வருகிறார். பா.ஜ.க தலைமையிலான ஒன்றிய அரசுக்கு எதிராக பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதே “ஓரணியில் தமிழ் நாடு”என்ற திட்டத்தின் நோக்கம்.மேலும்,இத் திட்டத்தின் மூலம் ஒன்றிய அரசு நம்மை வஞ்சிப்பதை மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி,திராவிட ஆட்சியின் திட்டங்களை எடுத்துக்கூறி தி.மு.க.உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி,திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நான்குனேரி, இராதாபுரம்,அம்பாசமுத்திரம் தொகுதிகளில் பொதுக் கூட்டங்கள், “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை முகாம்கள் புதன் கிழமை (ஜூலை 2) முதல் நடத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தில் உள்ள வாக்காளர்களில் 30 சதவிகிதம் பேரை கழக உறுப்பினர்களாக சேர்ப்பதே இலக்காகும். அதற்காக வீடு வீடாக தி.மு.க தொண்டர்கள் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளனர்.45 நாள்களுக்கு இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

அப்போது தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,நெல்லை மாநகர பொறுப்பாளர் (கிழக்கு) ஏ.எல்.பி. தினேஷ்,மாநில தொண்டரணி துணைச் செயலாளர் நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல்,நம்பி தமேயந்தி,ஒன்றியச் செயலர் சுபாஷ் தங்கபாண்டியன் உள்பட பலர் இருந்தனர்.

# பா.ஜ.க.வின் கோரப்பிடியில் அ.தி.மு.க. சிக்கியுள்ளது!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!



*சேலம், ஜூலை 3–*

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும். அமைச்சருமான இரா. இராஜேந்திரன் செய்தியாளர் களுக்கு பேட்டியளித்து கூறியதாவது:-

கழகத் தலைவர் முதல்வரின் ‘ஓரணியில் தமிழ்நாடு’ முழக்கத்தை தொடங்கி வைத்துள்ளார்.

அதன்படி ஒவ்வொரு குடும்பத்தையும் நேரில் சந்தித்து ஒன்றிய பா.ஜ.க. அரசால் இழைக்கப்பட்டவர்களுக்கு எதிராக ஒரணியில் திரள வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்து. பா.ஜ.க. என்ற பாசிசத்தை வன்மத்தோடு. தமிழகத்தை பார்க்கிறது.

அதே சமயம் பா.ஜ.க.வின் கோரப்பிடியில் அ.தி.மு.க. சிக்கியுள்ளது.

அதேபோல பல்வேறு மாநிலங்களில் இந்தியை திணித்து தாய் மொழியை அழிக்கும் நிலை ஏற்பட்டுளது. இந்த துரோகத்தை தோலுரித்து காட்டு வதற்கு ஓரணியில் தமிழ்நாட்டு மக்கள் இயக்கம் இந்த மக்கள் இயக்கத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள் சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளில் 40 சதவீதம் பேர் தி.மு.க. உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்கள். அதன் படி மாவட்டம் முழுவதும் 12லட்சம் பேர் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்கள். மேற்கண்டவாறு பேட்டியளித்து கூறினார்.

உடன் மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம் (சேலம் கிழக்கு) டி.எம். செல்வகணபதி எம்.பி (சேலம் மேற்கு ) இருந்தனர்.




இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் நடைபெற்ற ‘ஓரணியில் தமிழ்நாடு’ ஒன்றிய (BDA) Booth Digital Agent கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ‘ ஓரணியின் தமிழ்நாடு’ முன்னெடுப்பின் முதுகுளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், வனம் மற்றும் கதர் வாரியத்துறை அமைச்சருமான ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் ஏற்பாட்டில் கழக உறுப்பினர் சேர்க்கைப் பணிகள் குறித்து எடுத்துரைத்து, அதனோடு இணைந்த மற்ற கட்சிப் பணிகள் குறித்தும் நிர்வாகிகளிடம் உரையாற்றினார். முதுகுளத்தூர் தொகுதி களப்பணி அமைப்பாளர் ரஞ்சித் மணிகண்டன் ஒருங்கிணைப்பு செய்து வரவேற்புரையாற்றினார். தொகுதி பார்வையாளர் வேல்முருகன் இராமநாதபுரம் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சத்தியேந்திரன் முதுகுளத்தூர் தொகுதி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் பரூக் அப்துல்லா. தெளிவாக எடுத்துரைத்தார்கள். இக்கூட்டத்தில், உறுப்பினர் சேர்க்கைக்கென தனிப்பட்டவகையில் உருவாக்கப்பட்டிருக்கும் அலைபேசி செயலிக்கான பயிற்சியும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட ஒன்றிய, நகர்,கழக செயலாளர்கள்,ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர் மற்றும் பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் அணி நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



தேனி தெற்கு மாவட்ட கம்பம் ஒன்றிய இளைஞரணி சார்பாக தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டம் சுருளி பட்டி கலைஞர் திடலில் கம்பம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தேசிங்குராஜா தலைமையில் நடைபெற்றது. தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சுகுமாரன் வரவேற்புரை ஆற்றினார். கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், ஆகியோர் முன்னிலை வகித்தனர் மகாராஜன் எம்.எல்.ஏ. மாநில தீர்மான குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார், கழக இளம் பேச்சாளர்கள் சிந்துஜா, கனிஷ்கா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள் சுருளிப்பட்டி கிளைச் செயலாளர் காந்திராஜன் நன்றியுரை ஆற்றினார். மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.